விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 314 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 12 புதன்கிழமை (29.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அரசாங்க சேவையில்
## 8,547 வெற்றிடங்களை நிரப்ப அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல் வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் உள்ள 8,547 வெற்றிடங் களை நிரப்புவதற்கு அமைச் சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

பிரதமர் ஹரிணி அமர சூரிய சமர்ப்பித்த பிரேர ணைக்கு அமைச்சரவை இவ்வாறு ஒப்புதல் அளித் துள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி யாழில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பே
# சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்
### சுவிஸர்லாந்து சமூக ஜனநாயகக் கட்சி ஏகமனதாகத் தீர்மானம்

*(பேர்ன்)*

இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்வதற்கு சுவிஸர்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத்து ழைப்பு வழங்கவேண்டும் எனவும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற் கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் சுவிஸர்லாந்து சமூக ஜனநாயகக் கட்சி அதன் மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

SP

## கிளிநொச்சியில்
## காணாமல்போன இளைஞன் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் காணா மல்போன இளைஞன் ஒருவர் காட்டில் உள்ள மரமொன்றில் தூக்கில்

15ஆம் பக்கம் பார்க்க

## ரணில் மீதான வழக்கு இன்று நீதிமன்றில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதான ஊழல் வழக்கு இன்று கொழும்புக் கோட்டை

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் போதைப்பொருள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்
### பூநகரியில் அமைச்சர் ஆனந்த விஜேபால

(பூநகரி)



வட மாகாணம் உட்பட நாடு முழுவதும் காணப் படும் போதைப்பொருள் பிரச்சினைக்கு விரை வில் தீர்வு காணப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம்




15ஆம் பக்கம் பார்க்க

## ஐஸ் போதையுடன் வவுனியாவில் இளைஞன் கைது



(வவுனியா)

வவுனியா நகரப் பகுதி யில் ஐஸ் போதைப்பொரு ளுடன் இளைஞன் ஒரு வர் நேற்றுக் கைது

15ஆம் பக்கம் பார்க்க

## இரா.சம்பந்தன், ஹெகலிய பயன்படுத்திய இல்லங்கள்
### விரைவில் நீதிமன்றங்களாக மாற்றம்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இரா. சம்பந்தன், கெஹலிய ரம் புக்வெல, முன்னாள் இரா ஜாங்க அமைச்சரான திலும் அமுனுகம மற்றும் முன் னாள் இராஜாங்க அமைச் சரான சனத் நிஷாந்த பயன்படுத்திய வீடுகள் விரை வில் மேல் நீதிமன்றங் களாக மாற்றப்படவுள்ளன.

புதிய 4 மேல் நீதிமன்றங் களை

16ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.திருநெல்வேலியில்
## திருட்டில் ஈடுபட்ட இருவர் ஐஸ் போதையுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல் வேலியில் திருட்டில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் தேடப் பட்டு வந்த சந்தேகநபர்கள் இருவர் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்றுச் செவ் வாய்க்கிழமை கைது செய் யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலிப் பகுதி யில் உள்ள உணவகம் ஒன்றில் கடந்த இரண்டரை மாதங்களுக்கு முன்னர் ஒரு

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்.கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்.

## பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்தில் பாவிக்கப்பட்ட பின்வரும் பழைய பொருட்கள் பருத்தித்துறை வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**காலம் :- 06.11.2025 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி**

ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்கவும்.

**பொருட்களின் விபரம் வருமாறு**

1) பழைய இலத்திரனியல் பொருட்கள்
2) பழைய இரும்பு கேற்றும் இரும்புப் பொருட்களும்
3) பழைய மரம், சிலாகை
4) பழைய சுருக்குக் கதவு

**குறிப்பு :**

பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். அத்துடன் பகிரங்க ஏல விற்பனை மூலம் பொருட்களைப் பெற்றுக்கொள்வோர் அப்பொருட்களுக்கான பணத்தினை அன்றைய தினம் பி.ப 3.00மணிக்கு முன் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பொருட்களை விடுவிக்க முடியும்.

(C-4208) **பொது முகாமையாளர்**

## சர்வதேச...

சர்வதேச மட்டத்தில் இயங்கிவரும் அரச சார்பற்ற அமைப்பான "இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள்" எனும் அமைப்பினால் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்புத் தொடர்பில் கடந்த வருடம் வெளியிடப்பட்ட சட்ட அறிக்கையில் உள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு வரையப்பட்டிருக்கும் மேற்படி தீர்மானத்தில் "ஈழத்தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட வன்முறைகள், படுகொலைகள், மிகமோசமான மனித உரிமை மீறல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அத் தீர்மானத்தில் இலங்கையில் இடம்பெற்ற மீறல்களை ஐக்கிய நாடுகள் இனவழிப்புப் பிரகடனத்தின்படி இனவழிப்பாகக் கருதமுடியுமா? என்பது பற்றி சர்வதேச கட்டமைப்புக்களின் ஒத்துழைப்புடன் ஆராயுமாறு சுவிஸர்லாந்து அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு, சுவிஸர்லாந்தில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பு, மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படுவதை முன்னிறுத்தி பல தசாப்தகாலமாக அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்பவற்றை உள்வாங்கக்கூடியவகையில் மிகத்தெளிவான மனித உரிமைகள்சார் சுவிஸர்லாந்து வெளிநாட்டுக்கொள்கை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கும் சுவிஸர்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

மேலும் வருடாந்தம் மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று நடைபெறும் நிகழ்வு உள்ளிட்ட நினைவுகூரல் நிகழ்வுகள் எவ்வித இடையூறுமின்றி முன்னெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்படவேண்டும் எனவும், சுவிஸர்லாந்தில் உள்ள தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பும், நீதியும் உறுதிப்படுத்தப்படும் வரை அவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்புவது தவிர்க்கப்படவேண்டும் எனவும் அத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## பகிரங்க கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சத்தியக்காட்டு சந்தையின் 47' X 55' விஸ்தீரணம் கொண்ட பழைய கட்டிடத்தின் நில மட்டத்திற்கு மேல் பகுதியினை (Earth Level) இடித்து அப்புறப்படுத்தலுக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் அவர்களினால் பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்வி மனு கோரப்படுகிறது.

1. ஏலவிற்பனை பெறுகைகள் முறைக்கு அமைவாக இடம்பெறும்.
2. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- **29.10.2025ம் திகதியிலிருந்து 04.11.2025** ம் திகதி வரை சனி, ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை **09.00 மணிமுதல் பி.ப 03.00** வரை.
   **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 06.11.2025 மு.ப. 10.00மணி**
   **கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 06.11.2025 மு.ப. 10.00மணி**
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2025.10.29 ஆம் திகதியிலிருந்து 04.11.2025 ஆம் திகதி வரை மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 03.00 மணிக்கும் இடையில் குறித்த கட்டிடத்தை பார்வையிட முடியும் என்பதுடன் அதே காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா 50,000.00 இனையும் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 1,000.00 ஐயும் தலைமை அலுவலகத்தில் காசாக செலுத்தி கேள்வி படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் ரூபா 1,000.00 பெறுமதியான பற்றுச் சீட்டினை இணைத்து தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சத்தியக்காட்டு பழைய மரக்கறி சந்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கான கேள்வி"** என தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
5. அதிகூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் **2025.11.07**ஆம் திகதி வெள்ளிக்கிழமை **பி.ப.3.00** மணிக்குள் அத்தொகையினை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் முழுமையாக ஒரே தடவையில் காசாக செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு **2025.11.11** ம் திகதிக்குள் குறித்த கட்டிடத்தின் நிலமட்டத்திற்கு மேல் பகுதியினை இடித்து குறித்த சந்தை வளாகத்திலிருந்து அகற்றப்பட்டிருத்தல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதார் உரிய முறையில் இடித்து அகற்ற தவறுவாராயின் வைப்பு பணத்தினை மீளப்பெற முடியாது என்பதுடன் கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவுக்கு உரியதாகும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**
**(தொ.பே.இல. 021 225 0144)** (C-4209) **2025.10.29**

### கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நேற்றைய (28.10.2025) கேள்வி அறிவித்தலில் ஐந்தாவது விடயத்தில் 2025.10.11 என உள்ள திகதியை 2025.11.11 ஆக திருத்தி வாசிக்கவும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.** (C-4200)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## மரண அறிவித்தல்



## பரஞ்சோதி கண்மணி

உடுப்பிட்டி இமையாணன் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி கண்மணி அவர்கள் கடந்த 27.10.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - நாகம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இளையாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரஞ்சோதி அவர்களின் அன்பு மனைவியும் அருந்தவராசா(கனடா), கிருசாந்தினி(கனடா), பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லஜீதா(கனடா), குணராசா (கனடா), சுஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கவிஷ்(கனடா), சுஜான்(கனடா), கிறிசித்(கனடா), மொனிக்கா(கனடா), அபிராம் (கனடா), அக்சயன், ஆகிஷன், ரிஷோன், அக்னயா, பிரதீஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கனகம்மா(கனடா), அம்பிகைதேவி(கனடா), காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், நல்லநாதன், தில்லைநாதன், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வெள்ளைறோட்,**
**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.** (C-4213)

***தகவல்:***
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேரம் நீடிப்பு; முடிவில் மாற்றம் ஏதுமில்லை

## கல்வி அமைச்சு திட்டவட்டம்



**(கொழும்பு) ————————————————————**
**இலங்கையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளது.**

இந்த முடிவுக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலும் அமைச்சு இந்த உறுதியை வழங்கியுள்ளது.

தேசிய கல்வி நிறுவகம் முதலில் ஒரு பாட நேரத்தை ஒரு மணிநேரமாக நீட்டிக்க முன்மொழிந்தது. ஆனால் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, ஒரு பாட நேரம் 50 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டது.

இதன் காரணமாகவே பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சீர்திருத்தங்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் பரிந்துரைகளின்படி செயற்படுத்தப்பட வேண்டும் என்றும், அதன் முக்கியக் கொள்கைகளை மாற்ற முடியாது என்றும் செயலாளர் நாலக்க கலுவேவ தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களுக்குத் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த உரிமை உண்டு, ஆனால் திட்டமிடப்பட்டதை நம்மால் மாற்ற முடியாது. இந்த நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட செலவு ஏற்கப்பட்டுள்ளது.

எனவே, பாடசாலை நேரத்தை 2 மணி வரை நீடிப்பதில் மாற்றம் இல்லை. அது அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறும் என்றும் அவர் உறுதியளித்தார்.

தற்போது பிற்பகல் 1.30 மணி வரை இருக்கும் பாடசாலை நேரம், இந்தச் சீர்திருத்தத்தின் கீழ் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை (30 நிமிடங்கள் அதிகரிப்பு) நீட்டிக்கப்படவுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் இந்த புதிய கால அட்டவணையை எதிர்த்து வருகின்றன. எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதிக்குள் அரசாங்கம் முன்மொழியப்பட்ட கால அட்டவணையைத் திருத்தாவிட்டால், பாடசாலை தொடங்கும் போது ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

# விசேட சோதனையில் 771 பேர் கைது

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குற்றம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மூலம், நாடு முழுவதும் குற்றங்களில் ஈடுபடும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி நேற்று முன்தினம் திங்கட்கிழமை 29, 783 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சந்தேகத்தின் பேரில் 771 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குற்றங்களுடன் தொடர்புடைய, மற்றும் நேரடியாக 26 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கைது செய்ய 270 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், திறந்த பிடியாணைகளுடன் 213 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அதேநேரம் மது போதையில் வாகனம் செலுத்திய 34 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 11 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிறபோக்குவரத்து குற்றங்களுக்காக 4,188 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 3,000 கோடி இலங்கை ரூபா) கடனுதவித் தொகுப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.



இந்தத் தொகை, நாட்டின் தேசிய சுற்றுலாக் கொள்கையுடன் இணைந்து, கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட முதலீடுகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த நிதியுதவியானது, நிலையான சுற்றுலாத் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 70 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகைக் கடனாகவும், 30 மில்லியன் அமெரிக்க டொலர் வழக்கமான கடனாகவும் வழங்கப்படுகிறது.

குறிப்பாக, தம்புள்ளை (சிகிரியா உட்பட) மற்றும் திருகோணமலை ஆகிய இரண்டு முக்கிய சுற்றுலாத் தலங்களின் நிலையான சுற்றுலா மற்றும் நகர்ப்புற மேம்பாட்டில் இந்தத் திட்டம் விசேட கவனம் செலுத்தும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம், நிர்வாகம், சொத்து முகாமை, சுற்றுலா ஊக்குவிப்பு, திறன் மேம்பாடு, டிஜிற்றல் மயமாக்கல் போன்ற துறைகளில் நிறுவன மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும். (நி)


## விவேகானந்த சபை, கொழும்பு பரிசளிப்பு விழா 13.12.2025

பாடசாலை விடுமுறை காரணமாக 16.11.2025 நடைபெறவிருந்த பரிசளிப்பு விழா டிசம்பர் 13ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. அகில இலங்கை சைவசமய பாடப்பரீட்சை 2024 இல் பரிசுகள் பெற்றவர்கள் பெயர் 20.08.2025 திகதியிலும், நாவலர் கட்டுரைப் போட்டி 2024 இல் பரிசுகள் பெற்றவர்கள் பெயர் 10.09.2025 திகதியிலும் வீரகேசரி முழுபக்க விளம்பரங்களாக வெளியிடப்பட்டன.

இப்பரிசுகளை கொழும்பில் 13.12.2025 விழாவன்று நேரடியாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் நவம்பர் 04ஆம் திகதிக்கு முன்பு எமது **WhatsApp number 077 726 6461** இற்கு அறிவிக்க வேண்டும். தனிப்பட்ட பரிசு பற்றிய கடிதம் பாடசாலைகளினூடாக இவ் வாரம் சகலருக்கும் அனுப்பப்படும்.

அகில இலங்கை சைவசமய பாடப்பரீட்சை 02.11.2025

கலாநிதி எம்.ஆர்.ராஜ்மோகன்
சிரேஷ்ட சட்டத்தரணி
கௌரவ தலைவர்

சு.சிவசண்முகநாதன்
கௌரவ பொதுச்செயலாளர்

(1682)


# இலங்கை மத்திய வங்கிக்கு இரண்டு புதிய துணை ஆளுநர்கள்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் விதிகளின்படி, இலங்கை மத்திய வங்கிக்கு இரண்டு புதிய துணை ஆளுநர்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார். இந்த இரண்டு பெயர்களும் மத்திய வங்கியின் நிர்வாகக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.



அதன்படி, உதவி ஆளுநரான முனைவர் சி. அமரசேகர மற்றும் உதவி ஆளுநரான திரு. கே. ஜி. பி. சிறிகுமார ஆகியோரை முறையே 2025.10.24 மற்றும் 2025.11.03 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## சந்தைகள், கோழி இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழி இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு **2026.01.01** ஆம் திகதி தொடக்கம் **2026.12.31** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | : 2025.10.29 - 2025.11.11 பிற்பகல் 03.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | : 2025.11.12 மு.ப 10.00 மணி வரை |
| கேள்விதிறக்கும் திகதி | : 2025.11.12 மு.ப 10.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் இடம் | : வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட இரு பிரதிகளையும் **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு **12.11.2025** ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு

1. கேள்விப்பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டையையும்** அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபை தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2025 நவம்பர் 19 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
7. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
8. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும். பொதுச்சுகாதார பரிசோதகரது அறிவுறுத்தலை கடைப்பிடித்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
9. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன், இறால், நண்டு, கணவாய் கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மரக்கறிச் சந்தையில் விற்பனை செய்யும் 5' நீளம் கொண்ட முகப்புக்கு ரூபா 125.00 உம் மீன் வெட்டும் இடம் ஊடு ஒன்றிற்கு (5'X3') ரூபா 150.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 20.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது. பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை தரகுக்கட்டண நடைமுறை என்பன முற்றாக தடை செய்யப்பட் டுள்ளது.
10. பொதுமலசலகூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணம் ரூபா 20.00 ற்கு மேல் வரி அறவிட முடியாது.
11. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிட்முடியும்.
12. பின்வரும் சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைக் காரர்கள் மாதாந்தம் நிலையான மின்சாரக்கட்டணமாக கீழ்வரும் விபரப்படி மாதாந்தக்குத்தகையுடன் செலுத்துதல் வேண்டும். சங்கானை மரக்கறிச் சந்தை - 15,000.00, சங்கானை மீன் சந்தை - 3,000.00, சங்கானை மாட்டிறைச்சிக் கடை - 2,000.00 சத்தியக் காட்டுச்சந்தை - 2,000.00. சத்தியக்காட்டுச்சந்தை கருவாட்டுக்கடை - 750.00, சத்தியக்காட்டுச் சந்தை கோழிஇறைச்சிக்கடை - 750.00
13. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப் பட்டுள்ளது.
14. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
15. மூளாய் சந்தையினை குத்தகைக்கு எடுப்பவர் 01.01.2026 முதல் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு குறித்த சந்தையின் மீன்வியாபாரிகளிடமிருந்து இவ் விளம்பரத்தின் பிரகாரம் கட்டணத்தை அறவிடமுடியும். கோழி இறைச்சி கடையை தமது செலவில் சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கு அமைவாக அமைத்து கோழி இறைச்சியினை விற்பனை செய்ய முடியும்.
16. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
17. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

### சந்தைகள், கோழிஇறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை - 2026

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | சங்கானை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை | ___ | 24,810,000.00 | 496,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை மீன் சந்தை | ___ | 4,290,000.00 | 85,800.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 99,385.00 | 2,000.00 | 1,000.00 |
| 04 | சங்கானை கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 693,000.00 | 13,860.00 | 1,000.00 |
| 05 | சங்கானை மாட்டிறைச்சிக்கடை | 1.500.00 | 2,207,700.00 | 44.100.00 | 1,000.00 |
| 06 | மீன் சந்தை வாகன தரிப்பிட குத்தகை | 1,500.00 | 1,045.000.00 | 20,900.00 | 1.000.00 |
| 07 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 01 | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 02 | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 09 | சங்கானை பஸ்தரிப்பிட பொது மலசலகூடம் | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01 | சத்தியக்காட்டுச் சந்தை (மரக்கறிச் சந்தை மீன் சந்தை வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக) | - | 3,979,360.00 | 79,580.00 | 1,000.00 |
| 03 | சத்தியகாடு சந்தை கருவாட்டுக் கடை | 1300.00 | 70,125.00 | 1,400.00 | 1,000.00 |
| 04 | சத்தியக்காட்டுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1300.00 | 486,312.00 | 9,720.00 | 1,000.00 |
| 05 | பொன்னாலை வாராந்தச் சந்தை | | 52,305.00 | 1,040.00 | 1,000.00 |
| 06 | மூளாய் மீன் சந்தை (கோழி இறைச்சி கடை உட்பட) | | 133,100.00 | 2,660.00 | 1,000.00 |
| | வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | — | 528,561.00 | 10,570.00 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | — | 88,000.00 | 1,760.00 | 1,000.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை | 1,750.00 | 412,500.00 | 8,250.00 | 1,000.00 |
| 04 | சங்கரத்தை மாட்டு இறைச்சிக்கடை | 1,750.00 | 632,500.00 | 12,650.00 | 1,000.00 |
| | அராலி உப அலுவலகம் | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | ___ | 34,705.00 | 1,000.00 | 1,000.00 |

29.10.2025 (C-4210)

தலைவர், பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த மலேசிய கப்பல்

(கொழும்பு)

மலேசிய கடலோர காவற் படை கப்பலான 'KM BENDAHARA' நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

குறித்த கப்பலை இலங்கை கடற்படை சம்பிரதாய பூர்வமாக வரவேற்றுள்ளது.

'KM BENDAHARA' என்ற கப்பல் 64.16 மீற்றர் நீளமுள்ளது. இது 50 பேர் கொண்ட அங்கத்துவக் குழு வினரைக் கொண்டுள் ளது.

'KM BENDAHARA' தமது உத்தியோகப்பூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு, நாளை நாட்டைவிட்டு வெளியேற திட்டமிடப்பட்டுள்ளது. (நி)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**25/02, பொன்னாலை வீதி, 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 01**

வலிகாமம் மேற்குபிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-01, பொன்னாலை வீதி, 1ஆம் ஒழுங்கையிலுள்ள இல 25/02 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **நா.நாராயண சிங்கமும் பெண் தவமணியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனம் தனது தாயாருக்கு சீதனமாக கொடுக்கப்பட்டது என்றும், அவரின் ஆட்சியில் நெடுங காலமாக இருந்தது என்றும், அவர் குறித்த ஆதனத்தினை தனக்கு வாய்ச்சொல் நன்கொடையாக தந்திருந்தார் எனவும், குறித்த ஆதனம் கடந்த இருபது வருடங்களாக தனது தங்கு தடையற்றதும் எவருக்கும் மாறானதும் சுயாதீனமானது மான ஆட்சியிலுள்ளதன் பிரகாரம் ஆட்சியுரிமைச் சட்டத்தின் மூன்றாம் பிரிவின் கீழ் தாங்கள் ஆட்சியுரிமை பெற்றுக் கொண்டு விட்டதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் குமாரசுவாமி முகதாவில் 8045/17.03.2005ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நல்லையா விவானந்தராசாவும் பெண் மதிவதனியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10058/26.03.2006ஆம் இலக்க உறுதியால் குறித்த **இளையதம்பி நாராயண சிங்கமும் பெண் தவமணியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின விபரம் வருமாறு:
பெயர்: **"ஒற்றைத்தலைவன் குடியிருப்பு"**
இறை: **பொன்னாலை இறை**
விஸ்தீரணம்: **நில.பர.இலா 1 குளி 3**
எல்லைகள். **கிழக்கு**- வேலுப்பிள்ளை மாதவருக்குரிய ஆதனம், **வடக்கு** - இதன் மிகுதி ஆதனம், ஒழுங்கை, **மேற்கு**- ஸ்ரீ கிருஷ்ணன் சனசமூக நிலையத்தின் ஆதனம், **தெற்கு**- வைரமுத்து மகள் தங்கத்துக்குரிய ஆதனம்

குறித்த **நல்லையா விவானந்தராசாவும் பெண் மதிவதனியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நல்லையா விவானந்தராசாவும் பெண் மதிவதனியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடனஇந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (5751)



# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**25/01, பொன்னாலை வீதி, 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 01**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01 பொன்னாலை வீதி, 1 ஆம் ஒழுங்கையிலுள்ள இல 25/01 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **நா.நாராயண சிங்கமும்; பெண் தவமணியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனம் தனது தாயாருக்கு சீதனமாக கொடுக்கப்பட்டது என்றும், அவரின் ஆட்சியில் நெடுங்காலமாக இருந்தது என்றும், அவர் குறித்த ஆதனத்தினை தனக்கு வாய்ச்சொல் நன்கொடையாக தந்திருந்தார் எனவும், குறித்த ஆதனம் கடந்த இருபது வருடங்களாக தனது தங்கு தடையற்றதும் எவருக்கும் மாறானதும் சுயாதீனமானதுமான ஆட்சியிலுள்ளதன் பிரகாரம் ஆட்சியுரிமைச் சட்டத்தின் மூன்றாம் பிரிவின் கீழ் தாங்கள் ஆட்சியுரிமை பெற்றுக் கொண்டு விட்டதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் குமாரசுவாமி முகதாவில் 8045/17.03.2005ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பிரகாசம் நல்லையாவும் பெண் சத்தியபாமாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10059/26.03.2006ஆம் இலக்க உறுதியால் குறித்த இளையதம்பி **நாராயணசிங்கமும் பெண் தவமணியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**விவானந்தராசா சனுஸ்ரன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.த.விக்னராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2643/21.10.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த **பிரகாசம் நல்லையாவும் பெண் சத்தியபாமாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"ஒற்றைத் தலையன் குடியிருப்பு"**
இறை: **பொன்னாலை இறை**
விஸ்தீரணம்: **நில பர.இலா 02**
எல்லைகள்: கிழக்கு- வேலுப்பிள்ளை மாதவனுக்குரிய ஆதனம், வடக்கு-இதன் மிகுதியாதனம், மேற்கு-ஸ்ரீ கிருஸ்ணன் சனசமூக நிலையத்திற்குரிய ஆதனமாயிருந்து தற்போது வீதி, தெற்கு நல்லையா விவானந்தராசாவுக்கும் பெண் மணிவதனிக்கும் உரிய ஆதனம்

குறித்த **விவானந்தராசா சனுஸ்ரன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் **எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது **விவானந்தராசா சனுஸ்ரன்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபைப் பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (5750)


# இராசிபலன்

29.10.2025
ஐப்பசி 12, புதன்கிழமை
அட்டமி பின்னிரவு 5.37 மணி

உத்தராடம் பிற்பகல் 2.12 மணிவரை
சுப நேரம் 4.33 -6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
திருவாதிரை, புனர்பூசம்.

**வளவன்**


மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.


கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், கௌரவமான நாள்.


துலாம்

வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் கூடும்.


மகரம்

வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.


ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.


சிம்மம்

போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.


விருச்சிகம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்புக்கிடைக்கும்.


கும்பம்

சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்யும் நிலை ஏற்படலாம், சிறிய வேலையொன்றிற்காக பல முறை அலைய நேரிடலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


மிதுனம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், திருடர் பயமுண்டு.


கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


தனுசு

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.



மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மனைவியை ஆள்வதைவிட அரசு ஒன்றை ஆள்வது சுலபம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் வைரமுத்துவின் கரங்களில் 'துருவேறும் கைவிலங்கு'



"துருவேறும் கைவிலங்கு" எனும் மெய்யாவண நூல், "குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் ஒருங்கிணைப்பாளர், மு.கோமகனால் பிரபல தென்னிந்திய கலைஞரான கவிஞர் வைரமுத்துவிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

(அராலி)

தென்னிலங்கையின் அடிமைச் சிறையில் 16 ஆண்டு காலங்களாக தடுத்து வைக்கப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த ஈழத்தமிழ் அரசியல் கைதி "விவேகானந்தனூர் சதீஸ்" நெருக்கடிமிகு சிறைக்குள் இருந்து எழுதிய, 20 முதல் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இன்னும் பல தமிழ் அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில், தென்னிலங்கையின் உயர்ந்த சுற்றுமதிற் சுவர்களுக்குள் துயரனுபவித்து வருகின்ற எமது உறவுகளின் வெளித்தெரியாத பல உண்மைகளின் "மெய்ச் சாட்சியமாகப்" பார்க்கப்படுகின்ற "துருவேறும் கைவிலங்கு" எனும் இந்த ஆவண நூல், அனைத்துத் தரப்புகளினதும் கூர்ந்தவதானிப்புக்கு உட்படுத்தவேண்டியது கால அவசியமாகிறது.

அந்த வகையில், "நீண்ட நெடும் போருக்குப் பின்னரும் கூட, எமது தமிழினம் விடுதலைக்காக ஏங்குகின்ற வலி சுமந்த வாழ்வை அனுபவித்து வருகின்றது" என்கின்ற கனதிமிகு செய்தியினை, "ஈழத் தமிழினத்தின் விடுதலை பயணத்தில் பக்கத்து இருக்கைப் பங்காளியாக உறவுபூண்டு வருகின்ற தென்னிந்திய தேசத்திற்கு உரத்துச் சொல்ல வேண்டும்" என்பதற்காக ஈழத்தமிழ் திரைப்படத் தொடக்க விழா நிகழ்வுக்கு வருகை தந்திருந்த கவிஞர் வைரமுத்துவை, நேரில் சந்தித்த "குரலற்றவர்களின் குரல்" அமைப்பு, இந்த நூலினை அவரிடம் கையளித்துள்ளது. (8-104)

# யாழில் வன்முறைக் கும்பல்களின் கைகளில் கைத்துப்பாக்கி?

## பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டமை, போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளவரின் நண்பரின் கையடக்கத் தொலைபேசியில் கைத்துப்பாக்கிகள் காணப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


நல்லூர் - அரசடி பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரை கடந்த வாரம் பொலிஸார் போதைப்பொருளுடன் கைது செய்திருந்தனர். குறித்த இளைஞரிடம் இருந்து, சிறிய வாள் ஒன்றினையும் பொலிஸார் மீட்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த இளைஞரின் நண்பர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், கடந்த திங்கட்கிழமை ஒரு இளைஞரை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை, அவரது கையடக்கத் தொலைபேசியையும் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

அதன் போது வட்ஸ் அப் செயலியில் இன்னுமொரு இளைஞர் கைத்துப்பாக்கி மற்றும் தான் கைத்துப்பாக்கியுடன் காணப்படும் படத்தினை அனுப்பி இருந்தமையை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

அது தொடர்பில் இளைஞரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கைத்துப்பாக்கியுடன் காணப்பட்ட இளைஞர் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)





வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூரன் போர் உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் புடைசூழ பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்:சிவசாந்தன்)

# காரைநகர் வைரவருக்கு மணவாளக்கோலத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் அல்வின் வீதி ஸ்ரீ காமாட்சி ஞான வைரவப் பெருமானுக்கு இன்று புதன்கிழமை மணவாளக் கோலத் திருவிழா இடம்பெறவுள்ளது.

காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேகப் பெருவிழாவும் அத்துடன் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்று சுவாமி வீதி வலம் வரும் திருக்காட்சி இடம் பெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக மதுர கவி காரை.எம்.பி. அருளானந்தம் அவர்கள் "சங்காபிஷேக மகத்துவம்" எனும் விடயத்தில் தெய்வீகப் பேருரையும் இடம் பெறவுள்ளது. (3)

# 103 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா

(யாழப்பாணம்)

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 103 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா நாளை வியாழக்கிழமை முற் பகல் 10.30 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் சி.சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமாகிய செல்வி அகல்யா செகராசா கலந்து கொள்ள வுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் மற்றும் தலைமை அலுவலகத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)


# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | வவுனியா ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 250 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 150 | 300 | 250 | 150 |
| தக்காளி | 250 | 250 | 250 | 250 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 150 | 80 |
| கோவா | 200 | 160 | 200 | 200 | 150 |
| கரட் | 200 | 250 | 250 | 250 | 150 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 25 |
| புடோல் | 200 | 200 | 150 | 250 | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 200-300 | 250 | 300 | 230 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 180 | 140 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 600 | 300 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 300 | 120 |
| கருணைக் கிழங்கு | 250 | 220 | 250 | 300 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 400 | 400 | 275 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 250 | 140 |
| பீற்றூட் | 150 | 120 | 250 | 160 | 100 |
| கறிமிளகாய் | 350 | 450 | 400 | 500 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 250 | 300 | 150 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 500 | 375 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 300 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 160 | 80-160 | 150 | 100 | -- |
| தேசிக்காய் | 1500 | 1800 | 2000 | 1500 | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 | 150 |
| இராசவள்ளி | 750 | 900 | 1000 | 800 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 500 | 500 | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 200 | 60 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 60 | 35 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 40 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 150 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் வலைத்தொழிற்சாலையை பார்வையிட்டார் இளங்குமரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைந்துள்ள வலைத் தொழிற்சாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேரில் சென்று அதன் தொழிற்பாடுகளைப் பார்வையிட்டார்.

தொழிற்சாலையின் நடப்பு செயற்பாடுகள், உற்பத்தித் திறன், தொழிலாளர்களின் நல்வாழ்வு மற்றும் தேவையான மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் அங்கு பணியாற்றும் வலை உற்பத்தியாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் நிர்வாகப் பொறுப்பாளர்களுடன் விரிவான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

தொழிற்சாலையின் சாதனங்கள், உற்பத்தி முறைகள், மூலப்பொருள்கிடைக்கும்முறை, மற்றும் தயாரிப்புகளின் விநியோகச் செயல்முறைகள் பற்றியும் கேட்டறிந்து கொண் டார்

மேலும்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள், உபகரணங்களின் பழைய நிலை, பராமரிப்பு குறைபாடுகள், மற்றும் உற்பத்தி விரிவாக்கம் தொடர்பான தேவைகள், தொழிற்சாலையின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கான அமைப்பு சார்ந்த மாற்றங்கள், தொழில்நுட்ப மேம்பாடுகள், மற்றும் நிதி ஒதுக்கீட்டுத் தேவைகள் தொடர்பிலும் தொழிற்சாலை நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

கடல்சார் துறையில் முக்கிய பங்காற்றும் இந்த வலைத் தொழிற்சாலையின் செயல்திறன் உயரும் வகையில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாகவும் இதன்போது உறுதியளித்தார். (8-33)

# 9.91 மில்லியன் ரூபாய் நன்னீர் மீன்பிடிக்கு ஒதுக்கீடு




(தருமபுரம்)

வடமாகாண விவசாயம் மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் மாகாண குறித் தொதுக்கப்பட்ட நிதி மூலம் 9.91மில்லியன் ரூபா நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 44 பேருக்கு நன்னீர் மீன்பிடி வலைகள் வழங்கி வைக்கப்பட்டது .

வலையின் பெறுமதியில் மீனவர்கள் 50 வீதத்திற்கான பணத்தை செலுத்துவதுடன் 50வீதம் மானியமாக வழங்கப்படுகின்றது. மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மீன்பிடி அலகின் பணிப்பாளர் அருளானந்தம் சீராளன், தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் கலந்து கொண்டு மீன்பிடி வலைகளை மீனவர்களுக்கு வழங்கி வைத்தார். குறித்த நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவசிறீ, கிளிநொச்சி மாவட்ட செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (8-316)

# 'ஒரு வாக்கின் சக்தியின் கதைகள்' குறும்படப் போட்டி-2025



(யாழ்ப்பாணம்)

தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் 'ஒரு வாக்கின் சக்தியின் கதைகள்' குறும்படப் போட்டி - 2025 தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையினரின் பங்கேற்புடன் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

குறும்படத்திற்கு கதை எழுதுவது எப்படி, புகைப்பட கருவி நுட்பங்கள் மற்றும் காணொளி செம்மையாக்கம்,

கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி குறும்படத்தை எப்படி உருவாக்குவது, செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தி குறும்படங்களை எவ்வாறு தயாரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டது.

இந் நிகழ் வில் யாழ் .மாவட்ட பாடசாலைகளில் ஊடக கற்கைகள், நாடகம் அரங்கியல் கற்கை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதையும், ஆக்கபூர்வமான வெளிப்பாடு மூலம் தேர்தல் செயற்பாட்டில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு, இலங்கைத் தேர்தல் ஆணையம் "ஒரு வாக்கின் சக்தியின் கதைகள்" எனும் குறும்படப் போட்டியை இந்த ஆண்டு ஏற்பாடு செய்துள்ளது.

திறந்த பிரிவு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பிரிவு என இக்குறும்படப் போட்டியானது இரண்டு பிரிவுகளாக நடைபெற உள்ளது. இதற்கான தயாரிப்புக்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி நவம்பர் 14 ஆகும். தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளம் ஊடாக மேலதிக விபரங்களை அறிய முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (8-33)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 31.10.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் 44 டிப்பர் மணல், 3 டிப்பர் கிரவல், 1 டிப்பர் மண், இரும்பு மற்றும் துவிச்சக்கரவண்டிகள் என்பன ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)



சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

60 YEARS

திருமதி.

மஞ்சுளா உதயதாஸ்

(SLTS-I, வழிகாட்டலும் ஆலோசனையும்)



சேவை விபரம்

- யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை 17.08.1988 – 31.12.1992
- யா/கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம் 01.01.1993 – 07.02.1995
- யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் 08.02.1995 – 03.08.2006
- யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை 04.08.2006 – 22.09.2011
- யா/சென்தோமஸ் றோ.க.பெ.பாடசாலை 23.09.2011 – 31.12.2018
- யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 01.01.2019 – 29.10.2025
- யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை 21.03.2022 – 29.10.2025 (பகுதி நேரம்)

ஆரம்பக் கல்வி ஆசிரியர் -17.08.1988
கலைப்பட்டதாரி ஆசிரியர் - 05.05.1990
வழிகாட்டலும் ஆலோசனையும் - 26.10.2018
ஆசிரிய சேவையில்- 37 வருடம் 02 மாதம் 12 நாட்கள்

எமது வித்தியாலயத்தில் வழிகாட்டலும் ஆலோசனைப் பிரிவில் எமது மாணவர்களை வழிப்படுத்தி மாணவர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து கடந்த ஆறுவருடங்கள் எமது பாடசாலைக்கு தன் சேவையை நல்கி ஓய்வு பெற்றுச் செல்லும் நீங்கள் நீண்ட ஆயுளும், நீடித்தசுகமும், நிறைந்த அமைதியுடனும் நீடூழி வாழ இம் மணிவிழா நன்னாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர்-

அதிபர், ஆசிரியர், பணியாளர் நலன்புரிச்சங்கம்

யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை.

(1683)



இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368

யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி

(முன்பதிவு செய்யவும்)

(C-4265)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# உலகம் மீண்டும் காட்டாட்சிக்கு செல்வதா?

## ட்ரம்பிற்கு சீனா சூடு




(கோலாலம்பூர்)

மலேசியாவில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டில், சீனப் பிரதமர் லி கியாங் பேசும்போது அமெரிக்காவின் வரி விதிப்பு முறைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். உலகம் மீண்டும் காட்டாட்சி முறைக்கு செல்லக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் - சீன ஜனாதிபதி இடையே மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது. அமெரிக்காவுக்கு பதிலடி தரும் விதமாக அரியவகை கனிமங்களை ஏற்றுமதி செய்வதில் சீனா கட்டுப்பாடு விதித்தது.

இதையடுத்து நவம்பர் 1ஆம் திகதி முதல் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து சீனப் பொருட்களுக்கும், 100 சதவீதம் கூடுதல் வரி விதிப்பதாக அறிவித்தார்.

இந்த வரி விதிப்பு நிரந்தரமானது அல்ல என்றும் அடிக்கடி கூறுகிறார். எனினும் இத்தகைய வரி விதிப்புக்கு சீனா கடும் அதிருப்தியை தெரிவித்து வருகிறது.

ஆசியான் உச்சி மாநாட்டில், சீன பிரதமர் லி கியாங் பேசியதாவது: வர்த்தக விடயங்களில், உலகம் மீண்டும் காட்டாட்சிக்கு திரும்பி செல்லக்கூடாது.

வலிமையானவர்கள் பலவீனமானவர்களை கொடுமைப்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு அவர் பேசினார்.

சீனப் பிரதமர் லி கியாங், தென் கொரியாவில் ஜி ஜின்பிங் மற்றும் டொனால்ட் ட்ரம்ப் இடையேயான சந்திப்புக்கு சில நாட்களுக்கு முன்பு உலகில் வர்த்தக விடயங்களில் ஒரு தலைப்பட்சத்தை கண்டித்தார். (நி)

# ரஷ்யா அணுவாயு... கொந்தளித்...



ரஷ்யா சமீபத்தில் அணுசக்தி மூலம் இயங்கும் புரெவெஸ்ட்னிக் என்ற கப்பல் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் மூத்த இராணுவ தளபதிக்கு இடையிலான உயர்மட்ட சந்திப்புக்கு பிறகு இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த புதிய அணு ஆயுத சோதனைக்கு டொனால்ட் ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இது ஏவுகணை சோதனைக்கான பொருத்தமற்ற காலம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# துருக்கியில் நிலநடுக்கம் 22 பேர் காயம்

(அங்காரா)

துருக்கியின் மேற்குப் பகுதியான பாலிகெசிர் மாகாணம் சிந்திர்கி நகரில் நள்ளிரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவானதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்தது.

நிலநடுக்கத்தால் சிந்திகியில் உள்ள கட்டடங்கள் குலுங்கியது.

நள்ளிரவில் திடீரென கட்டடங்கள் குலுங்கியதால் தூக்கத்திலிருந்து பதறி அடித்து எழுந்து வெளியே ஓடி வந்த மக்கள் சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.


அந்த நேரத்தில் மழை பெய்ததால், மசூதிகள், பள்ளிகள் மற்றும் விளையாட்டு அரங்குகளில் வீடு திரும்ப விரும்பாதவர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

நிலநடுக்கத்தால் அப்பகுதியில் 3 கட்டடங்கள் பயங்கர சேதம் அடைந்தன.

22 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஆனால் உயிரிழப்பு உள்ளிட்ட பாதிப்பு பற்றிய தகவல்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

இஸ்தான்புல் நகரம், பூர்சா, மணிசா மற்றும் இஜ்மீர் உள்ளிட்ட மாகாணங்களிலும் இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் உணரப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. (நி)



# வெனிசூலாவை குறிவை... கரீபியன் கடலி...

(வெனிசுலா)

போதைப் பொருள் வேட்டை எனக்கூறி அமெரிக்கா வெனிசுலா நாட்டை சுற்றி தங்கள் நாட்டின் அதி நவீன போர்க்கப்பல்களை குவித்து வரும் சம்பவம் பெரும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

கரீபியன் கடலில் போதைப்பொருள் கடத்தலை தடுக்க அமெரிக்கா கடற்படையை குவித்து வருகிறது. வெனிசுலா அருகே படைகள் குவிக்கப்பட்டதால், இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

வெனிசுலா ஜனாதிபதி மதுரோ, அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதாக எச்சரிக்கிறார். இதனால் சர்வதேச கடல் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

லத்தின் மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குள் அதிகளவில் போதைப் பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் போதைப் பொருட்கள் அனைத்தும் கரீபியன் கடல் வழியாக அமெரிக்காவுக்குள் நுழைந்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், போதைப்

பொருள் க... அமெரிக்க ... கடும் நடவ... த்து வருகிற... சர்வதேச க... பாதுகாப்பை... வருகிறார்.

தொடர்ந்... நாட்டில் இ... பொருள் கட... இதற்கு பின... இருப்பதாக ... குற்றம்சாட்டி...

சமீபத்தில்... வழியாக ... கடத்தி வ... கப்பலை அ... வீரர்கள் க... நேரத்தில் ... னர். இதன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ஆயுத சோதனை ...த்த ட்ரம்ப்!



**(வோஷிங்டன்)..........**
**ரஷ்யாவின் அணுவாயுத சோதனைக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

...ய அணு ...ல்ட் ட்ரம்ப் ...ளார். ...வுகணை ...ற காலம் ...ப்பிட்டுள்

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், புதிய ஏவுகணைகளை சோதனை செய்வதை விட்டு விட்டு, உக்ரைனுடனான போர் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையில் கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஒரு வாரத்தில் முடிய வேண்டிய போர் தற்போது விரைவில் நான்காவது ஆண்டை அடைய இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கனடா பிரதமரை சந்திக்க மறுத்த டொனால்ட் ட்ரம்ப்

(ஒட்டாவா)

கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்திக்க விருப்பம் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆசியான் உச்சி மாநாட்டில் பங்கேற்ற டொனால்ட் ட்ரம்ப் தமது ஆசிய பயணத்தின் இரண்டாவது கட்டமாக ஜப்பான் தலைநகர் டோக்கியோவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது இந்த வார இறுதியில் ஆசிய, பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்திக்க வாய்ப்பு உள்ளதா எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த டொனால்ட் டர்ம்ப், "நான் அவரை சந்திக்க விரும்பவில்லை.

இன்னும் சிறிது காலம் நான் அவரை சந்திக்கப் போவது இல்லை.

கனடாவுடன் தற்போது செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் மிகவும் மகிழ்ச்சி தருகின்றது, அதை செயற்படுத்த உள்ளோம்" என தெரிவித்துள்ளார். (நி)

# ...வைக்கும் அமெரிக்கா ...லில் பதற்றம்!

...பொருள் கடத்தலை தடுக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதே சமயம், சர்வதேச கடல் எல்லையில் பாதுகாப்பையும் பலப்படுத்தி வருகிறார்.

தொடர்ந்து, வெனிசுலா நாட்டில் இருந்து போதைப் பொருள் கடத்தப்படுவதாகவும் இதற்கு பின்னணியில் சீனா இருப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம்சாட்டி வருகிறார்.

சமீபத்தில், கரீபியன் கடல் வழியாக போதைப்பொருள் கடத்தி வந்த நீர்மூழ்கிக் கப்பலை அமெரிக்க கடற்படை வீரர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் சுட்டு வீழ்த்தினர். இதனையடுத்து மீண்டும் அதே வழியாக வந்த 10 இற்கும் மேற்பட்ட படகுகளை அமெரிக்கக் கடற்படை வீரர்கள் தாக்கி அழித்தனர்.

இந்த நிலையில் போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதாகக் கூறி, வெனிசுலா அருகே அமெரிக்கா தனது படைகளைக் குவித்து வருவது, இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

குறிப்பாக, வெனிசுலாவில் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ ஆட்சிக்கு வந்த நாள் முதலே அந்நாட்டுடன் அமெரிக்கா தொடர்ந்து மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக வெனிசுலா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள அமெரிக்கா, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவளித்து வருவதாக குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

அதே சமயம் ஜனாதிபதியின் ஆட்சியை கவிழ்க்கும் சதி வேலை நடப்பதாகவும் புகார் எழுந்துள்ளது.

இப்படி பரபரப்பான சூழலுக்கு மத்தியில் அமெரிக்க கடற்படையின் அதிநவீன விமானம் தாங்கி போர்க்கப்பலான "யுஎஸ்எஸ் ஜெரால்டு ஃபோர்டு"-ஐ, அதன் தாக்குதல் குழுவுடன் கரீபியன் கடலுக்குச் செல்லுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் முதலே கரீபியன் கடலில் தங்கள் படைகளைக் குவித்து வரும் அமெரிக்கா, தற்போது மேலும் எட்டு போர்க்கப்பல்கள், ஒரு நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் எஃப்-35 ரக போர் விமானங்களையும் அப்பகுதிக்கு அனுப்பியுள்ளது இதனால் சர்வதேச கடல் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு வெனிசுலா ஜனாதிபதி மதுரோ பதிலடி கொடுத்துள்ளார்.

அதில், தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவோம். தங்கள் நாடும் இராணுவப் படைகளைத் தயார் நிலையில் வைத்துள்ளது என எச்சரித்துள்ளார். (நி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே
# விரைவில் புதிய கப்பல் பாதை

(கொழும்பு)

**இந்தியாவும் இலங்கையும் இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே புதிய கப்பல் பாதையை ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளன.**



மும்பையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு இந்திய கடல்சார் வாரத்தின் போது. இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தியாவின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் சர்பானந்த சோனோவால், இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுரா கருணாதிலகவுடன் இது தொடர்பில் இருதரப்பு சந்திப்பை நடத்தியுள்ளார்.

இந்தப் புதிய கப்பல் பாதையைத் தொடங்குவதன் மூலம் இந்தியா - இலங்கை கடல்சார் இணைப்பை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இரு நாட்டு அமைச்சர்களும் விவாதித்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (நி)

# போதைப்பொருள் ஒழிப்பு 3 சந்கேநபர்கள் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை பொலிஸார் மற்றும் விமானப்படையினர் இணைந்து சட்டவிரோத போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது நாய்கள் சகிதம் வைத்து பல வீடுகள் சோதனை செய்யப்பட்டன. அவ்வேளை சட்டவிரோத கசிப்பு 40 லீற்றருடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் அதே பகுதியில் 5 ஐந்து கிராம் 50 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பெண் ஒருவரும் 5 ஐந்து கிராம் 100 மில்லி ஐஸ் போதைப் பொருளுடன் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 16,500 ரூபா பணமும் பொலிஸாரல் பறிமுதல் செய்யப்பட்டது,

குறித்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.திசாநாயக்க தெரிவித்துள்ளார். (8-316)




## இன்று ஒரு தகவல் 472

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# பெரியார்

ஒரு தடவை பெரியார் அவரின் தங்கச்சி வீட்டுக்கு சாப்பிடப் போய் இருந்தாராம். தங்கச்சி வீட்டிலே ஏதாவது விசேஷமான சாப்பாடு. என்றால் இவரைக் கூப்பிட்டு சாப்பிடச் சொல்லுவார்களாம். அது மாதிரி அன்றைக்கும் கூப்பிட்டிருக்கிறார்கள் போய் இருக்கிறார்.

தங்கச்சிக்கு ஒரு மகன். அப்போது அந்த பையனுக்கு வயது 9. அந்தப் பையன்தான் ஓடிவந்து இவரைக் கூப்பிட்டுப் போவது வழக்கம். வழக்கப்படி அந்தப் பையன்தான் ஒரு செம்பிலே தண்ணி எடுத்து கை அலம்புவதற்காக ஊற்றுவான். பெரியார் அதிலே கை கழுவிக் கொள்வார்.

இப்படித்தான் ஒரு சமயம் அந்தப் பையன் ரொம்ப அக்கறையாக ஒரு செம்பிலே தண்ணீர் எடுத்துக்கொண்டு ஓடி வந்தான் குனிந்து அதை ஊற்றிக்கொண்டே இருந்தான். பெரியார் கையை கழுவிக்கொண்டே இருந்தார்.

அந்த சமயத்திலே தண்ணீர் ஊத்திக்கொண்டிருந்த அந்த பையன் தலையிலே "பொட்" என்று ஓர் அடி விழுந்தது. யார் என்று நிமிர்ந்து பார்த்தான். பார்த்தால் பெரியாரே தான் இன்னொரு கையாலே அப்படி தட்டியிருக்கிறார். ஏன் இப்படி தலையிலே அடிச்சார் என்று அந்தப் பையனுக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்துப் போய் பேசாமல் இருந்துவிட்டான். ஒன்றும் கேட்கவில்லை.

இருந்தாலும் பெரியார் சும்மா விடவில்லை. அந்தப் பையனைப் பார்த்தார். "ஏன் அடித்தீர்கள்?" என்று கேள்" என்றார்.

"ஏன் அடித்தீர்கள்?" என்று கேட்டான் அந்தப் பையன் அதற்குப் பெரியார் சொன்னார்.

"இது தண்ணீராக இருப்பதனாலேதானே இப்படி தாராளமாக ஊற்றுகிறாய்? நெய்யாக இருந்தால் இப்படி ஊற்றுவியா? தண்ணீராக இருந்தாலும் அதை அளவோடு தான் செலவு செய்ய வேண்டும் வீணாக்கக்கூடாது" என்றாராம்.

இது இந்தக் காலத்துக்கும் தேவையான ஓர் அறிவுரை.

அந்தப் பையன் இந்த அறிவுரையை மனதிலே வைத்துக் கொண்டான். அவர் பிற்காலத்திலே வாழ்க்கையிலேயும் வியாபாரத்திலேயும் முன்னுக்கு வருவதற்கு அது ரொம்ப உபயோகமாக இருந்தது!

பெரியவர்கள் எல்லாம் நம்மிடம் சின்னச் சின்ன விடயத்திற்கெல்லாம் சிக்கனமாக இருக்கச் சொல்லுவார்கள். அப்போது எல்லாம் அது நமக்கு வேடிக்கையாகத் தெரியும். அந்த மாதிரி அறிவுரைகளுடைய மதிப்பு பின்னால் அனுபவத்திலே தான் நமக்குப் புரியும். இதைவிட வேடிக்கையான சம்பவம் கூட ஒன்று உண்டு.

பெரியார் ஒரு தரம் தன்னுடைய உதவியாளர் ஒருவரை கூப்பிட்டாராம். அவர் வந்து நின்று "என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டிருக்கிறார். யாரோ ஒருவருக்கு ஒரு தந்தி கொடுக்கச் சொன்னாராம். தந்தியிலே கொடுக்க வேண்டிய விடயம் என்ன ஐயா என்று கேட்டிருக்கிறார் உதவியாளர்.

"ஏற்கனவே சொல்லிய" விடயத்தைதான் தந்தியிலே கொடுக்க வேண்டும். அதிகமாக வார்த்தைகளை செலவு செய்யாமல் சுருக்கமாக கொடு - என்று சொல்லி, அதற்கான காசும் கொடுத்து அனுப்பினாராம். அந்த உதவியாளர் உடனே போய் தந்தியை கொடுத்துவிட்டு வந்துவிட்டார் வந்ததும் பெரியார் கேட்டாராம். "எப்படி கொடுத்தாய் தந்தி வாசகம் என்ன" என்று!

'Already told' என்று இரண்டே வார்த்தையிலே கொடுத்துவிட்டேன் என்றிருக்கிறார் அவர் ரொம்பப் பெருமையாக!

"இன்னும் சுருக்கி இருக்கலாமே. ஒரே வார்த்தையிலே அதை சொல்ல முடியாதா?" என்றாராம் பெரியார்" அது எப்படி முடியும்?" என்றிருக்கிறார் அவர்.

"ஏன்? Tolded என்று கொடுக்க வேண்டியது தானே!" என்றாராம்.

"அப்படி ஒரு வார்த்தை இங்கிலீஷ்லே இல்லையே!" என்றாராம்.

"இல்லை என்றால் என்னய்யா... விடயம் புரியுதா இல்லையா. தந்தியை வாங்கிறவர் அதைப் புரிந்துகொள்ள மாட்டாரா?" என்றாராம் பெரியார். ஒரு தடவை பெரியார் ஒரு மேடையிலே உட்கார்ந்திருக்கிறார். மேடைக்கு எதிரிலே கீழே முதல் வரிசையிலே அவருக்கு எதிரிலே கால் மேலே கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார் ஒருவர். இதைப் பார்த்துவிட்டு ஒருவர் பெரியாரிடம் சொன்னாராம். "பாருங்கய்யா... அவனை! கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் கால் மேலே கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான்." என்றாராம். பெரியார் மெதுவாக அவர் பக்கம் திரும்பி:

"அவன் காலை அவன் கால் மேலே போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். இதிலே நமக்கு எங்கே ஐயா மரியாதை குறைந்துவிடப் போகுது!" என்றாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் பயன்பாட்டைத் தவிர்த்து துணிப்பைகளை பயன்படுத்தும் வழமைக்குள் வந்தாக வேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மாற்றம் என்று ஒன்றில்லையெனில் உலகில் எதுவுமே நடக்காது. காலநேரத்திற்கேற்ப மாற்றங்கள் உலகில் நடந்தேறியே ஆகவேண்டும் என்பது நியதி. இயற்கையின் சாகசத்தால் ஏற்படும் மாற்றங்கள் ஒருபுறமிருக்க மனிதனால் ஏற்படுத்தப்படும் மாற்றங்களும் இதனுள் உள்ளடக்கம். பலகாலமாக பேசி வந்த விடயமான காலநிலை தன்பாட்டுக்கு மாறத்தொடங்கிவிட்டது.

அதனை அடிப்படையாக வைத்து விவசாய செய்கைகளும் மாறத் தொடங்கிவிட்டன. நம் வாழும் சூழலும் எதிர்பார்க்காத வகையில் மாறத்தலைப்பட்டு விட்டது. இவையனைத்திற்கும் காரணமான மனிதன் நானும் மாறுகின்றேன் என கூட்டம் போட்டு பேசிக்கொண்டிருக்கின்றானே தவிர மாற்றத்திற்குள் இன்னும் வரவில்லை.

நாம் கழிவுகளாக வெளித்தள்ளும் பிளாஸ்ரிக் பொருட்கள், லஞ்சீற்கள். பொலித்தீன் பைகளிலிருந்து நெகிழித்துகள்கள் (microplastics) அதிகளவில் எமது சூழலை மாசுபடுத்தத் தொடங்கிவிட்டன. குறிப்பாக குடிநீரில் இவ்வாறான நெகிழித்துகள்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றதனை ஆய்வுகள் எடுத்துச் சொல்கின்றன.

மனம்தானே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம். மனதை மாற்றிக்கொள்ளக் கூடியவர்கள் தான் வெற்றியாளர்களாக உயர்ந்திருக்கின்றார்கள். இங்கே ஒரு மாற்றம் வேண்டும்.

எம்மவர்களால் செய்யக்கூடிய மாற்றம். பொலித்தீன் பைகளையோ சொப்பிங் பைகளையோ பயன்படுத்துவதில்லை என்னும் மாற்றம். சனத்தொகை கூடிய தேசத்திலும் வசதியுள்ள தேசத்திலும் இவ்விரண்டையும் அவசிய தேவைகருதி பயன்படுத்துவதில் மட்டுப்படுத்தியிருப்பது சாத்தியமென்றால் ஏன் எங்களால் முடியாது? யாழ்ப்பாணத்தில் இந்த நடைமுறை வருகின்றது என அறிந்ததிலிருந்து மகிழ்ச்சி.

மாநகரசபை முதலில் நகர குப்பைகளை விரைந்து அகற்றும் நடவடிக்கையில் அதிலும் முறையாக இவற்றை பிரித்தெடுத்து எரிப்பதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்தி கொடுப்பதற்கு முதலிடம் கொடுக்கலாமே!

குப்பைகளை மீள்சுழற்சி செய்தல் என்பது நீண்டகாலமாக நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றதென்றாலும் அதில் எத்தனை சதவீதம் மீள்சுழற்சி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது என்பது ஒரு கேள்விக்குறி. இதனை ஒரு பிரகடனமாக மாற்றி அனைவரையும் இந்த மீள்சுழற்சி செய்தலுக்குள் உள்வாங்கவேண்டும். சேதனப்பொருட்களை மீள்சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தும் கலாசாரத்திற்குள் நாம் அனைவரும் முன்வரவேண்டும். வெறுமனே இதனை வாசித்துவிட்டு போகின்றவர்களுக்காக இந்த வேண்டுகோளினை விடுக்கவில்லை. உண்மையிலே வாசித்தவுடன் அதனை நடைமுறைப்படுத்தி அந்த செய்தியின் பயனை அடைகின்ற ஒவ்வொருவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் மாணவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள். எங்களால் செய்யக்கூடிய இந்த காரியத்தை செய்துதான் பார்ப்போமே. நகரை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியது. இதில் தட்டிக்கழிக்கும் பழக்கத்தை உருவாகவிடக்கூடாது.

சேதனப்பொருட்களில் இலகுவாக உக்கக்கூடிய பைகளை உற்பத்தி செய்வதனால் சந்தையில் கடைகளில் இவ்வாறான பைகள் புழக்கத்திற்கு வந்துவிடும். இவ்வாறானவற்றை விலைகுறைந்ததாக நுகர்வோர் விரும்பி வாங்கும் பொருளாக மாற்றினால் குப்பையின் பிரச்சினையை ஓரளவிற்கு தீர்த்துக் கொள்ளலாம். வாழைநாரிலிருந்த பைகள், பனையின் ஓலையிலிருந்து பைகள், கமுகுமர இலைமடலிலிருந்து உணவுண்ணும் கோப்பைகள், பேணிகள் என பலவகையான பொருட்களிலிருந்து உற்பத்தியாகின்றன.


இருப்பினும் இந்த பயன்பாட்டை மேலும் விரிவுபடுத்த வேண்டும். புத்தாக்கங்களும் புதியனவற்றை தேடலும் இதற்கு பதில் சொல்லும். பாடசாலை மாணவர்களின் புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் செயன்முறையாக இவ்வாறான கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் தொழில்நுட்பங்களை கண்டுபிடிக்கலாம்.

மாறாக துணிப்பைகள் போன்று வேறு சேதன தாவரமீதிகளால் உருவாக்கக்கூடிய பைகளையும் அறிமுகப்படுத்தலாம். பேப்பர் பைகள் மற்றும் தேநீர் கப்புகள் புழக்கத்தில் இருந்தாலும் இன்னும் புதுமைகளுக்கு இடமிருக்கின்றது. இதற்குரிய ஊக்கத்தைக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் இதற்கு முதலிடம் கொடுத்தால் நாம் எதிர்பார்க்கின்ற நல்ல மாற்றங்கள் எமது பிரதேசத்தில் நடந்தேறும்.

சேதனக் கழிவுகளை மீள்சுழற்சி செய்து மீண்டும் பாவனைக்கு எடுக்கச்செய்தால் இருக்கின்ற வளத்தை வைத்துக்கொண்டு விலை குறைவான பொருட்களை உற்பத்தி செய்து கொள்ளலாம்.

எமது பிரசேதத்தில் காணப்படும் வளரக்கூடிய தாவரங்களிலிருந்து வித்ம்விதமான பைகளை உற்பத்தி செய்யும் தொழிற்றுறை இங்கே உருவாக வேண்டும். பனைமரத்திலிருந்து பைகள் தட்டுக்கள் இன்னும் கொள்கலன்கள் உருவாகின்றது போல பாக்குமரத்தின் இலைக்காம்பிலிருந்து தட்டுக்கள் டம்ளர்கள் இன்னும் பலவிதமான பொருட்களும் உருவாகின்றன.

இவை போல ஏனைய தாவரங்களிலிருந்தும் எமது பயன்பாட்டுக்கான பொருட்கள் உருவாக வேண்டும். வாழையிலையில் தட்டுக்கள் வாழையிலை நார்கள் என பல பயன்பாடுகளை எமது தேசம் எதிர்பார்த்திருக்கின்றது. தேக்கமிலைகளை பயன்படுத்தி உணவு உட்கொள்ளும் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. இது காலத்தின் தேவை. இதற்காக மாணவர்களிடையே புத்தாக்க போட்டிகளை நடாத்தி மீள்சுழற்சி செய்யக்கூடிய தாவர பொருட்களை எமது தேவைக்கு குறிப்பாக லஞ்சீற் மற்றும் சொப்பிங் பைகளை அறவே பயன்படுத்தாமல் தவிர்ப்பதற்கான வழிவகைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.



சுற்றுலாத்துறையின் விருத்தி மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழிசமைக்கும் வழங்கல் சேவைகளை (Supporting services) பெருக்கிக் கொடுக்கும். இங்கே நாம் கூறியிருப்பது சுற்றுலாத்துறையேயன்றி உல்லாசத்துறையல்ல. எமது கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்கு சுற்றுலாத்துறை முதன்மையிடம் கொடுக்குமாயின் மற்றைய பிரதேசங்களில் இருப்பவர்களையும் சுற்றுலாத்துறைக்கு முதலிடம் கொடுக்க அழைக்க வழியுண்டு. அதனுடனிணைந்த சுற்றுலாவுக்கான உபசேவைகள் விருத்தியடைந்தால் இளையவர்களுக்கான வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும். க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்று வெளியேறியவர்கள் மற்றும் பல்கலைக்கழக பட்டதாரிகளை ஒன்றிணைத்து உள்ளூர் உற்பத்திகளை உருவாக்கும் செயன்முறைக்கு முன்னுரிமையளிக்கலாம்.

நாம் உருவாக்கும் பட்டதாரிகளில் வெளிநாடு சென்று மேற்படிப்புக்குள் புகுவோரையும் தொழிற்றுறைக்குள் உள்ளீர்க்கப்படுவோரையும் கணக்கிலெடுத்தால் பலர் உள்ளூரிலேயே வேலைக்காக அலைந்து திரியும் திரிசங்கு நிலையைக் காணலாம். எமது பிரதேசத்து வளர்ச்சி இவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கும் நிலையில் இல்லையென்பதே கவலைக்குரிய விடயமாகும்.

கிராமங்களிலுள்ள வளங்களை முறையாக மதிப்பீடுசெய்து ஒவ்வொரு கிராமத்திற்கும் அதற்கேற்ற தொழிற்றுறையை உருவாக்கலாம். இதற்காக கிடைக்கின்ற விஞ்ஞான தொழில்நுட்பத்தை கிராமத்தை நோக்கி நகர்த்துதல் அவசியமாகும்.

எமது கிராமங்கள் அனைத்தும் சூரியசக்தி கிராமங்களாக தானியங்கி தொழினுட்பத்தினூடான உற்பத்திகளை செய்யும் தொழினுட்ப கிராமங்களாக பரிணமித்தால் எமது பொருட்கள் வெளிநாட்டுக்கு தரமானதாக ஏற்றுமதி செய்யப்பட்டால் பலாலி விமானத்தளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் என்பன விரைந்து இந்த பொருட்களின் ஏற்றுமதிக்கு வழிவிட்டால் வடமாகாணத்தின் உற்பத்தியும் தொழிற்றுறையும் விரைந்து உயர்வு காணும். இந்த மாற்றத்தினையும் அனைவரும் காண ஆவலாயிருக்கின்றோம்.

அன்றாடம் நாம் பயன்படுத்திவிட்டு எறிந்து விடுகின்ற பழக்கத்தை நாம் தவிர்த்துக்கொண்டால் பல நகரக்குப்பைகள் வீதிக்கு வரமாட்டா. சேதனக்கழிவுகளை முதலில் மீள்சுழற்சிசெய்வதனை முழுமையாக கவனத்திலெடுக்கும் அதேநேரத்தில் பொனித்தீன், சொப்பிங் பைகள், சாப்பாடு சுற்றும் பொலித்தீன் பைகள் என பலவற்றுக்கு விடைகொடுக்கலாம். இது தனிமனித முயற்சியல்ல. அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கால சந்ததிக்காக செய்யும் கடமை எனக் கொள்ளலாம். நாமும் வாழ்ந்து மற்றையவர்களையும் வாழ வைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 896





காரப் பெண்ணை அழைத்துக் கொண்டு என்னுடன் வா! இரண்டு இளவரசர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் சக்கரவர்த்திக்குத் தெரியப்படுத்தி விட வேண்டும். சின்ன இளவரசரைக் கடலிலிருந்து கரை சேர்த்த ஓடக்காரப் பெண் நேரில் அதைப்பற்றிச் சொன்னால் சக்கரவர்த்திக்கு நம்பிக்கை உண்டாகலாம்?" என்றார்.

எப்படியாவது ஓடிப் போகத்தான் முயன்றிருப்பாள்! என்றான் ஆழ்வார்க்கடியான்.

"எனக்கென்னவோ ஒரு நம்பிக்கை இருக்கிறது. இத்தனை தூரம் வந்தவள் சக்கரவர்த்தியைப் பார்க்காமல் போகமாட்டாள் என்று. நம்மால் முடிந்த முயற்சிகளையெல்லாம் செய்து பார்க்கலாம். ஆனால், இனிமேலும் சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்குப் போகாமல் காலம் தாழ்த்துவது முறையன்று. நீயும் அந்த ஓடக்

முதன்மந்திரி அநிருத்தரும், அவருடைய சீடனும், பூங்குழலியும் சக்கரவர்த்தியின் அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனை முகப்பிலேயே இளையபிராட்டியும் வானதியும் அவர்களுக்காகக் காத்திருந்தார்கள். ஊமை ராணி அகப்படவில்லையென்ற செய்தி இளையபிராட்டிக்கும் கலக்கத்தை அளித்தது. அவள் பெரிய பழுவூர் மன்னரின் அரண்மனைத் தோட்டத்தில் புகுந்த செய்தி கலக்கத்தை அதிகப்படுத்தியது. இதிலிருந்து விபரீத விளைவு ஏதேனும் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்ற கவலையும் ஏற்பட்டது.

"ஐயா! பெரிய பழுவூர் மன்னரின் மாளிகையிலிருந்து வெளியேறுவதற்குச் சுரங்க வழி இருக்கிறதாமே? அதன் வழியாகப் போய் விட்டால்?"

முதன்மந்திரிக்கு வந்தியத்தேவனின் நினைவு வந்தது. "தாயே! அந்த வழியைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாயிருக்குமா? எல்லாரும் வாணர் குலத்து வாலிபனைப் போன்ற அதிஷ்டசாலியாயிருப்பார்களா? ஆயினும் கோட்டைக்கு வெளியிலும் ஆட்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்!" என்றார்.

பின்னர் ஆழ்வார்க்கடியானையும் பூங்குழலியையும் இளையபிராட்டியுடன் விட்டுவிட்டு முதன்மந்திரி மட்டும் சக்கரவர்த்தி படுத்திருந்த இடத்துக்குச் சென்றார். சக்கரவர்த்திக்கும் அவர் அருகில் வீற்றிருந்த வானமாதேவிக்கும் வழக்கமான மரியாதைகளைச் செலுத்திவிட்டு, புயலினால் சோழ நாடெங்கும் நேர்ந்துள்ள சேதங்களைப் பற்றி விசாரித்துத் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்ததினால் சீக்கிரமாக வரமுடியவில்லை என்று சக்கரவர்த்தியிடம் தெரியப்படுத்திக் கொண்டார்.

அந்த ஏற்பாடுகளைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டதில் சக்கரவர்த்திக்குச் சிறிது திருப்தி உண்டாயிற்று.


"தனாதிகாரி இல்லாத சமயத்தில் நீங்களாவது இப்போது இங்கு இருந்தீர்களே! அது நல்லதாய்ப் போயிற்று! ஆனால் இது என்ன நான் கேள்விப்படுவது? கோடிக்கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகப் பிடித்து வந்திருக்கிறீராமே? சற்று முன் கோட்டைத் தளபதி சொன்னார்.

( தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## புத்திபலம்



(நேற்றைய தொடர்ச்சி)

"விடுவிடு" வென்று கீழே இறங்கி, தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான்.

கயிற்றின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டிற்கு ஓடி வந்தான். அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி வந்து விட்டனர். உடனே இளங்கோ கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களை நெருங்கினான்.

எனதருமை நண்பர்களே! உங்களுக்கும் எனக்கும் ஒரு போட்டி! என்றான் இளங்கோ.

என்ன போட்டி நோஞ்சான்? என்று கேட்டனர்.

உங்களுக்கும் எனக்கும் கயிறு இழுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள். நான் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன்.

யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்!" என்றான் இளங்கோ. அதைக் கேட்டு அந்த மூன்று பலசாலி நண்பர்களும் "ஹா... ஹா... ஹா...!" என்று பலமான சிரிப்புச் சிரித்தனர்.

"நோஞ்சான் பயலான உனக்கும், பலசாலிகளான எங்களுக்கும் கயிறு இழுக்கும் போட்டியா? வெளியே சொன்னால் எங்களுக்குத்தான் அவமானம் போய் வேறு ஏதாவது வேலையிருந்தால் பார்! என்றனர் அவர்கள்.

இதோ பாருங்கள். ஆளைப் பார்த்து எடை போடாதீர்கள். எனக்குள் இருக்கும் பலம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உண்மையான பலசாலிகளாக இருந்தால் என்னோடு போட்டியிடுவீர்கள்.

நீங்களோ போலி, பலசாலிகள் போல வேஷம் போடுகிறீர்கள்!" என்று அவர்களைச் சீண்டிவிட்டான்.

"சுண்டைக்காய் பயலே! எங்கள் பலத்தையா போலி என்றாய். உனக்குப் பாடம் கற்பித்தால்தான் புத்தி வரும். பிடி மறுமுனையை ஒரே ஒரு இழுவைதான். நீ எங்கோ பறந்து சென்று மண்ணைக் கௌவப் போகிறாய்!" என்று சொல்லிவிட்டு கயிற்றின் ஒரு முனையைப் பிடித்தனர்.

தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது ஒவ்வொரு செயல்களின் மூலம் மகிழ்ச்சியைப் பரப்புபவர்களே மேன்மையானவர்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் யாழ்ப்பாணத்தின் பெருமையை உலகம் அறிந்துள்ளது; நாம் அறிந்தோமா?

2026ஆம் ஆண்டில் உலகில் பார்வையிடக் கூடிய சிறந்த நகரங்களில் ஒன்றாக எங்கள் யாழ்ப்பாணம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தாலியை தளமாகக் கொண்ட உலக வாவிய பயண ஊடக நிறுவனமாகிய லோன்லி பிளேனட் நிறுவனம் இதனை உறுதி செய்து தனது ஊடகப் பதிப்பில் வெளியிட்டுள்ளது.

**சிறந்த பயணம் – 2026** என்ற உலகளாவிய பயண வழிகாட்டியில், எங்கள் யாழ்ப்பாண நகரம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளமை கண்டு நாம் இறுமாப்பெய்த முடியும்.

இவ்வாறு பிரஸ்தாப நிறுவனம், யாழ்ப்பாணத்தைத் தெரிவு செய்தமைக்கு யாழ்ப்பாணத்தின் தனித்துவமான கலாசாரப் பாரம்பரியம் காரணமாயிற்று.

உண்மையில் எங்கள் யாழ்ப்பாணம் புண்ணிய பூமி. எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாத இயற்கையின் கொடை மற்றும் நிலவளம், கடல்வளம், தமிழர் பாரம்பரியப் பண்பாடுகளைப் பேணுகின்ற உன்னதம், உறவுமுறைக் கலாசாரங்கள், ஆலய வழிபாடுகள், திருவிழாக்கள், ஊர்கூடித் தேர் இழுக்கும் ஏற்பாடுகள்,

வீதியில் இறங்கி விட்டால் எங்கும் அறிமுகமான முகங்கள், கூடவே உறவு பாராட்டுகின்ற ஊர்கள், நலம் விசாரிக்கும் எங்கள் உறவின் மூத்தவர்கள்,

திருமணச் சடங்குகள் இன்னும் மங்களகரமான நிகழ்வுகள், அந்த நிகழ்வுகளில் கூடுகின்ற சொந்தங்கள், அயல் அட்டங்கள், நட்புகள், உற்றவர்கள், ஊரவர்கள், அலுவலக நட்புகள் என இந்த உலகில் எங்கும் இல்லாத பக்க பலங்கள் எங்களின் வாழ்வியலோடு ஒன்றாகியுள்ளன.

இதற்கும் மேலாக, இழப்புகளின்போது இடுக்கண் களைகின்ற உறவுகளும் நட்புகளுமான கூட்டு வாழ்க்கை வேறு எங்குதான் கிடைக்கும்.

இதனாலன்றோ இத்தாலியை தளமாகக் கொண்ட அந் நிறுவனம் ஓ! உலக மக்களே! நீங்கள் வெளிநாடு செல்வதற்கும் நகரங்களைப் பார்ப்பதற்கும் விரும்பினால், இலங்கையில் தனித்துவமான கலாசாரப் பண்பாட்டுப் பின்னணியோடு இருக்கக்கூடிய யாழ்ப்பாணத்துக்குச் செல்லுங்கள். அந்த நகரம் அற்புதமானது. அது சமூக, ஆன்மீக சுகத்தைத் தரவல்லது. அந்த யாழ்ப்பாண நகர மக்களின் வாழ்வும் வளமும் பண்பாடும் மனித வாழ்வின் உன்னதத்தை இயம்ப வல்லது என்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் குறித்த நிறுவனம் யாழ்ப்பாணத்தை முன்மொழிந்துள்ளது.

ஓ! தமிழ் மக்களே! உலகம் அறிந்த எங்கள் மண்ணின் பெருமையை நாம் அறிந்தோமா? அறிந்தால் இறைவனால் தரப்பட்ட நிம்மதியும் சுகமும் ஆறுதலும் கொட்டிக்கிடக்கின்ற எங்கள் யாழ்ப்பாணத்தின் பெருமையை பேணிப் பாதுகாத்தல் வேண்டும். அதற்காய் எமைச் சூழ்ந்த தீதை தீயில் எரித்தல் வேண்டுமன்றோ.

# வடக்கில் சட்டவிரோதச் சொத்துக் குவிப்பு குறித்து கிடுக்குப்பிடி விசாரணை

## தீவிரம் காட்டும் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)
சட்ட விரோதமான முறையில் சொத்துச் சேர்த்தமை தொடர்பில் வடக்கில் பரவலாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்து தற்போது வவுனியாவிலும் பொலிசாரின் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் விற்பனை, மோசடியான முறையில் காணிகளை அபகரித்து சொத்துச் சேர்த்தமை உள்ளிட்ட சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும்நோக்குடன் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

புதிய பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து யாழ்ப்பாணத்தில் பலருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தற்போது வவுனியாவுக்கும் இந்த நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் விற்பனை, மோசடியான முறையில் காணிகளை அபகரித்தல், போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் மூலம் சொத்துச் சேர்த்த நபர்கள் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் தாயகத்திலிருந்தும் போதைப்பொருள் வர்த்தகம் மூலம் கோடீஸ்வரர்களாகிய நபர்களே இந்த விசாரணைகளின் பிரதான இலக்கு எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

## நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி காலி, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## கொழும்புத்துறையில் புத்தகக் கண்காட்சி

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் மாபெரும் புத்தகக் கண்காட்சியொன்று இன்று புதன்கிழமை காலை 7.30 - மாலை 5.30 மணி வரை கொழும்புத்துறை சென். யோசப் வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் திருமதி யசியானா மரிய சந்திரகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## தெல்லியூர் மகாஜனவின் பரிசளிப்பு விழா

(தெல்லிப்பழை)
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நவமகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் அவர்களது நினைவு தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று (29) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்விற்கான ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார். இந்நிகழ்வின் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலன் அவர்களும் சிறப்பு அதிதியாக கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்.மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளருமான மகாஜனன் இ.சுரேந்திரநாதன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நவமகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் அவர்களது நினைவுப் பேருரையைக் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்.பல்கலையின் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான மகாஜனன் திருமதி பரதனி மதனகுமார் ஆற்றவுள்ளார். (ம-7,3)

## போலித் துப்பாக்கி சகிதம் நீதிமன்றினுள் பிரவேசம்

### பெண்ணுக்கு விளக்கமறியல்

அவிசாவளை நீதவான் நீதிமன்றத்திற்குள் போலித் (விளையாட்டு) துப்பாக்கியுடன் செல்ல முற்பட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை நீதவான் நீதிமன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய குறித்த பெண்ணை விசாரணைக்குட்படுத்தியபோது போக்குவரத்துத் தொடர்பான வழக்கு ஒன்றுக்காகத் தாம் வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

அவரது அடையாள அட்டையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அவருக்கு எவ்வித வழக்கும் நேற்றைய தினம் இருந்திருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த பெண் சோதனைக்குட்படுத்தப்பட்ட போதே போலித் துப்பாக்கியை வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

இல்லாத வழக்கை இருப்பதாகக் கூறி நீதிமன்ற வளாகத்திற்குள் நுழைந்தமை மற்றும் போலித் துப்பாக்கியை தம்வசம் வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## வடக்கில் GovPay மூலம் போக்குவரத்து அபராதம்

### கிளிநொச்சியில் ஆரம்பம்


அரசாங்கத்தின் டிஜிட்டல் கட்டணத் தளமான "GovPay" மூலம் வடக்கு மாகாணத்தில் போக்குவரத்திற்கான அபராதம் செலுத்தும் முறை நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத் திறன் விருத்தி மண்டபத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் அபராதங்களைச் செலுத்துவதில் கால விரயத்தைக் குறைத்து வினைத்திறனான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

"GovPay" மூலம் போக்குவரத்து அபராதம் செலுத்தும் நடைமுறை ஏற்கனவே மேல் மற்றும் தென் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றாவதாக வடக்கு மாகாணத்திலும் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

32

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இக்கட்சி இடதுசாரிகளோடு கூட்டிணைந்து இருந்ததுடன் இடதுசாரிக்கட்சிகளின் வளர்ச்சிக்கு மலையக தோட்டத்தொழிலாளர்கள் களமாக அமைந்திருந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

இடதுசாரிக் கட்சிகளை இலங்கை, இந்தியத் தமிழர்கள் ஆதரித்ததிற்கு முக்கிய காரணங்கள் ஆரம்ப காலங்களில் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடியமையும் இனவாதம், சாதிவாதம் கொண்டிராமையுமாகும்.

**1948 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம்**

இலங்கைப் பிரஜை அல்லது குடிமகன் யாரென வரையறுக்கும் இச் சட்டம் சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், இலங்கை முஸ்லிம்கள் ஆகியோருக்கு பரம்பரை அடிப்படையில் தாமாக குடியுரிமை பெற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருந்தது எனினும் மலையக மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் பிறந்த ஒருவர் தான் இலங்கை பிரஜை என்ற தகுதியைப் பெறுவதற்கு தனது தந்தை அல்லது தந்தை வழிப் பாட்டன் இலங்கையில் பிறந்திருப்பதை நிரூபிக்க வேண்டும்.

குறித்த நபர் இலங்கைக்கு வெளியே பிறந்தவராக இருந்தால் அவரது தந்தையும் தந்தையின் தந்தையும் இலங்கையில் பிறந்தமைக்கான சான்றுகளை சமர்ப்பித்தாக வேண்டும் என்ற ஏற்பாட்டிற்கு உட்பட்டே பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். மலையக மக்களின் பிறப்புச் சான்றிதழே இதற்கான வலிதான சான்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால் 1895 ஆம் ஆண்டில் இருந்தே இலங்கையில் பிறப்பைப் பதிவு செய்வதும் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் முறையும் அமுலுக்கு வந்திருந்த நிலையில் இச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஏறக்குறைய அனைவரும் தமது பிரஜாவுரிமையை முழுமையாக இழந்தனர்.

1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இரண்டு விதமான இலங்கைக் குடியுரிமைகளை வரையறுத்தது. அவை: வம்சாவளிக் குடியுரிமை மற்றும் பதிவுக் குடியுரிமை என்பனவாகும். மேற்கூறப்பட்டவை வம்சாவளிக் குடியுரிமை பெறுவதற்கான நிபந்தனைகளாகும். பதிவுக் குடியுரிமை பெறுவதற்கு தொடர்ச்சியாக 10 வருடங்கள் (திருமணமானவர்கள் 7 வருடங்கள்) இலங்கையில் வாழ்ந்திருத்தல் வேண்டும். என்ற மட்டுப்பாடு இருந்தது.

இச் சட்டத்திற்கு முன் இலங்கையிலுள்ள சிங்களவர், இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள் ஆகியோரைப் போலவே மலைநாட்டுத் தமிழரும் பிரித்தானியப் பிரஜைகளாக இருந்தபடியால் அவர்களுக்கு பிரஜாவுரிமை இருந்தது.

இக் குடியுரிமைச் சட்டம் 1948 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 1948 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. தந்தை செல்வா அவர்கள் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டத்தை மிகக்கடுமையாக எதிர்த்துப் பேசினார். "இன்று மலைநாட்டுத் தமிழர்களது கழுத்துக்கு கத்தி விழுந்துள்ளது. நாளை ஆட்சிமொழி பற்றி முடிவு செய்யும் நேரம் வரும்போது இலங்கைத் தமிழர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும்" என்று அவர் எச்சரித்தார்.

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கடினத்தன்மையைக் குறைப்பதற்கு பாராளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. அதுவே இந்திய - பாகிஸ்தானியர் குடியிருப்பாளர் (பிரஜா உரிமை) சட்டம். இச் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு 1949 ஓகஸ்ட் 5 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்டது.

இச் சட்டத்தின்படி இருந்த நிபந்தனைகளையும் (இலங்கையில் வாழ்ந்த காலம் மற்றும் பணவசதி) இந்தியத் தமிழர்களால் நிறைவேற்ற முடியவில்லை. காரணம் அவர்கள் பணவசதி படைத்தவர்களல்ல. மற்றையது அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை சொந்தபந்தங்களைப் பார்க்க இந்தியா சென்று வருபவர்கள். இச் சட்டம் இயற்றப்பட்டு அடைப்புக் குறிக்குள்ளே "பிரஜா உரிமை" என்று குறிப்பிடப்பட்டது. இச் சட்டத்தின்படி நாட்டின் குடிகளாகவன்றி (Citizen), குடியிருப்பாளராக (Resident) இம் மக்கள் கணிக்கப்பட்டனர்.

1949 ஆம் ஆண்டு, மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் நோக்குடன் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கு ஒரு திருத்தத்தினை கொண்டுவந்தார். இச் சட்டத்தால் குடியுரிமையை இழந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் உரிமையும் மறுக்கப்பட்டது.

மலையக மக்கள் இலங்கையை தமது சொந்த நாடாக கருதி வாழ்ந்து வந்திருந்தனர். 1946 இல் சோல்பரி குழுவினர் 80 வீதமான மலையக மக்கள் இலங்கையை தமது சொந்த நாடாக கருதி வாழ ஆரம்பித்து விட்டனர் என்று அறிக்கையிட்டிருந்த நிலையிலேயே இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மலையக மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

(முற்றும்)



அரியாலை நாவலடி உதயதாரகை சிறுவர் கழகத்தின் சிறுவர் தினக்கொண்டாட்டம் அண்மையில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் சிறுவர் கழக உப தலைவரின் தலைமையில் நடைபெற்றது.



கிளிநொச்சி சிவநகர் கிராம மூத்தோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலைக்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலவும் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கும் மாணவர் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கும் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்வு காண வேண்டும் எனக் கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலுக்கு முன்னால் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் குறித்த போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசாரா பணியாளர் வெற்றிடங்கள் 355 காணப்படுகின்றபொழுதிலும் 117 வெற்றிடங்களே நிர்வாகத்தினால் கோரப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பல்கலைக்கழக சுற்று நிருபத்திற்கு முரணாக தனியார் நிறுவனங்களூடாகவும் ஊழியர்கள் உள்வாங்கப்பட்டு சேவை ஒப்பந்தத்தினூடாக நியமனம் செய்யப்படுவது தவறு எனவும் சுட்டிக்காட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கெனவே இந்த முறைகேடு தொடர்பாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் பல்கலைக்கழகப் பேரவைக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டும் அவை புறக்கணிக்கப்பட்டதால் நேற்றுப் போராட்டத்தில் இறங்கியுள்ளதாகப் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

இந்தநிலையில் உடனடியாக வெற்றிடங்கள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்படவேண்டும் எனவும் இதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை போராட்டத்தின் ஆரம்பத்தில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் ஊழியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோரும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## செம்மணிப்...

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி, யாழ்ப்பாணம் செம்மணி வளைவுக்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை மற்றும் நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக்குழு ஆகியவை இணைந்து முன்னெடுத்த போராட்டத்தில் மதத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் கலந்து கொண்டு செம்மணிப் புதைகுழிக்கு நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,33,104)

## வவுனியாவில்...

செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மன்னார் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞராவார்.

வவுனியாப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி றிஸ்னி தலைமையில் பொலிஸார் வவுனியா நகரப் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது 15 கிராம் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

## திருட்டில்...

இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் உணவக உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சந்தேகநபர்களை அடையாளம் கண்டிருந்த போதிலும் அவர்கள் தலைமறைவாகி இருந்தனர்.

இந்நிலையில் நேற்று பொலிஸ் புலனாய்வுத்துறையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், தலைமறைவாகியிருந்த இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் சோதனைக்குட்படுத்தியபோது அவர்களது உடைமையில் இருந்து 160 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## காணாமல்போன...

தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் யூனியன் குளம் பகுதியைச் சேர்ந்த அப்சரன் (வயது-26) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த 24ஆம் திகதி வெளிநாட்டுக்கு பயணமாக இருந்த நிலையில், கடந்த 19ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார்.

காணாமல் போன மகனைப் பெற்றோர் தேடி வந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி அக்கராயன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் உறவினர்களும் இளைஞனைத் தேடி வந்தனர்.

இந்நிலையில் இளைஞனின் வீட்டில் இருந்து சுமார் 02 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காட்டினுள் மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ம-7,316)

## ரணில் மீதான...

நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

வெளிநாட்டுப் பயணத்தின்போது அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஓகஸ்ட் மாதம் ரணில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் அவரது உடல்நலம் மோசமடைந்த நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து விசாரணைக்காக Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

இதன்போது தலா 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான 3 சரீரப் பிணைகளில் நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.(ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 5996 — X 1 9 7 7 2 8
அத சம்பத — X 7 7 2 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0571
National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 112 — மிதுனம் 06 33 49

தன நிதானய — திகதி - 2025.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 2026 — U 43 54 60 70 U

மெகா பவர் — திகதி 28/10/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2344 — X 18 07 55 59 60

ஜய — திகதி 2025.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0264 — T 7 2 0 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4238 — சீட்டிழுப்பு திகதி 28.10.2025 — Y 19 24 44 55 — Y

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 1305 — துலாம் 06 21 34 62 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 28.10.2025 — வெற்றி வாரம் 0704 — ஆங்கில எழுத்து 0 — 3 2 7 3 5 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,378,356.00
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2970 — சீட்டிழுப்பு திகதி 2025.10.28 — தினம் செவ்வாய்க்கிழமை — 12 52 55 78 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,650,623.20
சனிதா — திகதி 28.10.2025 — வெற்றி வாரம் 5131 — 28 37 48 67 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,118,386.80
சசிரி — வெற்றி வாரம் 0801 — சீட்டிழுப்பு திகதி 28.10.2025 — செவ்வாய்க்கிழமை — 16 17 25 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4682 — சீட்டிழுப்பு திகதி 28.10.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 08 14 47 62 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — C 29 04 12 18 47 — 2146 — 28.10.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.603,205,151.40
அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2796 — சீட்டிழுப்பு திகதி 2025.10.28 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,634,012.00 — 04 24 30 44 G
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L - 2026
PAPER CLASS
புவியியல்
N.BABU
அலகு ரீதியிலான மீட்டல் வகுப்பு
(சனி, ஞாயிறு : 12 - 1 Pm)
> தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
> ஆரம்பம் : 01.11.2025 சனி 12Pm
T.P : 077 936 5087
DMI ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம்) யாழ்ப்பாணம்.
(5766)



புதிய கல்வியாண்டு – 2026
தரம் 6
கணிதம்
ஆசிரியர் திரு.T.அற்புதராஜா
புதிய பிரிவு ஆரம்பம் : திங்கட்கிழமை (03.11.2025) மாலை 5.00 மணி
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
192/20, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 0777 222 478
(5757)



அறை வாடகைக்கு
யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இராமநாதன் வீதியில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறை ஒன்று நீண்டகால மாத வாடகைக்கு உண்டு.
(பெண்கள் மட்டும்)
077 208 7778
(5759)



யாழ்ப்பாணத்தில் Voyzant
கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்
◆ விமான பயணச்சீட்டுக்கள் ◆ பயணக் காப்புறுதி
◆ விசா சேவைகள் ◆ வெளிநாட்டு சுற்றுலா
மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(5725)


# செவ்வந்திக்கு உதவிய சட்டத்தரணி கைது

(கொழும்பு)

கணேமுல்ல சஞ்சீவவை படு கொலை செய்வதற்காக இஷாரா செவ்வந்திக்கு, பிஸ்டல் துப்பாக்கியை மறைத்துக் கொள்வதற்காக "தண்டனைச் சட்டக்கோவை" நூலின் பிரதி யொன்றை வழங்கிய பெண் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சட்டத்தரணி கடவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)


31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

29.09.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த ரேவடி, நடராசா வீதி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவாலிங்கம் தங்கமணி என்பவர்களின் புத்திரியும் மத்தொனி கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை கந்தசாமி அவர்களின் மனைவியுமாகிய

அமரர் கந்தசாமி உருக்குமணிதேவி (குட்டியம்மா)



அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல் வேறு வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது தாயின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 29.10.2025 புதன்கிழமை அன்று காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைத்தலைத் தொடர்ந்து காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மத்தோனி, கரவெட்டி. தகவல் : குடும்பத்தினர்
(1680)


## 8,547 வெற்றி...

இதில் அதிகபட்சமாக, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சின் கீழ் 5,198 வெற்றிடங்கள் (பொலிஸ் ஆட்சேர்ப்புகள் உட்பட) நிரப்பப்படவுள்ளன.

இதைத் தொடர்ந்து புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சு (1,261), மேல் மாகாண சபை (414), இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சு (355), நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு (310) ஆகியவற்றிலும் கணிசமான எண்ணிக்கையிலான ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வடக்கில்...

பூநகரிக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் ஆனந்த விஜேபால பொது மக்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், வடக்கில் போதைப்பொருள் பிரச்சினை காணப்படுகின்றது. விரைவில் அதற்கு முடிவு கட்டப்படும். போதைப் பொருளை ஒழிக்க பொலிஸ் குழுக்களை நியமிப்போம். சுற்றி வளைப்புக்களை மேற்கொள்வோம் என்றார்.

மேலும் போதைக்கு அடிமையான இளைஞர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்படும் என்றார். (ம-7,316)

## இரா.சம்பந்தன்...

விரைவாக ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்காக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள 4 கட்டிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதன்படி கீழ் கண்ட முகவரிகளில் உள்ள கட்டிடங்களில் புதிய மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

கொழும்பு -07 கிறகெரி வீதி, இலக்கம் B 88 இல் உள்ள கட்டடம், கொழும்பு- 07 பௌத்தாலோக்க மாவத்த, இலக்கம் C 76 இல் உள்ள கட்டடம், கொழும்பு- 07 விஜேராம வீதி, இலக்கம் B 108 இல் உள்ள கட்டடம், கொழும்பு 07 ஸ்டென்மோர் சந்திரவங்கய, இலக்கம் B 12 கட்டடம் ஆகியனவாகும். (ம-7)


மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகர பிரதேச செயலகத்தில் உதவிப் பணிப்பாளர் - திட்டமிடல் ஆகக் கடமையாற்றி 29.10.2025 இன்று பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற

உயர்திரு.சின்னத்தம்பி சண்முகானந்தன்
(இலங்கை திட்டமிடல் சேவை - தரம் II)
B.BAd(Hons),MRDP

சேவை விபரங்கள்

| இல | பதவிகள் | காலப்பகுதி | சேவையாற்றிய நிலையம் |
|---|---|---|---|
| 01 | பட்டதாரி பயிலுநர் | 03.08.1994 – 09.07.1997 | பிரதேச செயலகம் – பச்சிலைப்பள்ளி |
| 02 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 10.07.1997 – 28.02.2008 | மாவட்ட செயலகம் – கிளிநொச்சி |
| 03 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01.03.2008 – 21.06.2009 | பிரதேச செயலகம் – வவுனியா நகரம் |
| 04 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 22.08.2009 – 07.04.2022 | பிரதேச செயலகம் – வெங்கல செட்டிக்குளம் |
| 05 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 08.04.2022 – 29.10.2025 | பிரதேச செயலகம் – வவுனியா நகரம் |

கண்ணியமான அரச சேவையில்
திட்டமிடல் பணியில் கோலோச்சிய
மாமனிதன் திரு. சண்முகானந்தன்
ஊர் விரும்பும் உத்தம புருசராய்
ஆற்றிய சேவைகள் ஆற்று வெள்ளம்!

அளவிடற்கரிய பணிச்சுமை இருப்பினும்
உதவித் திட்டமிடல் பணிப்பாளர் – எனும்
உயரிய சேவையின் உன்னதம் போற்றிய
உயர்ந்த மனிதன்!

சாந்த குணத்தினன் சிரித்த முகத்தினன்
சமத்துவம் பேணும் நல் குணக்குன்று
சேவையில் ஓய்வு நிலை காணும் தருணம்
நன்மைகள் விளையவும் நலம் பல பெருகவும்,
இன்பங்கள் சூழ இல்லம் சிறக்கவும்
ஆதவன் போல் மலர்ச்சி ஆயுள்வரை நீளவும்
சக உத்தியோக நண்பர்கள்
மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: வட மாகாண இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர் சங்கம்
(5760)



கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-4212)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(C-4211) 076 825 7716 (ஆகாஸ்)



வாடகைக்கு
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி பழைய தபாற் கந்தோர் வீதியில் 1 ம் மாடி, 2 ம் மாடி அலுவலகத்திற்கு ஏற்ற வகையில் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு :
076 315 6470
(C-4207)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org